## ஜனவரி – 31 – வியாழன்

### புனித ஜோன் பொஸ்கோ

### "கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" (மாற்கு 4:23)

**முதல் வாசகம் : எபிரேயர் : 10 :19 – 25**

சகோதர சகோதரிகளே, இயேசுவின் உடலைக் கோவிலின் திரைச்சீலைக்கு ஒப்பிடலாம். இத்திரைச்சீலை வழியாகத் திருத்தூயகத்துக்குள் நுழைய நமக்குத் துணிவு உண்டு. ஏனெனில் அவர் இரத்தம் சிந்தி நமக்கெனப் புதியதொரு வழியைத் திறந்து வைத்துள்ளார். இதுவே வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் வழி. மேலும் கடவுளுடைய இல்லத்தின்மீது அதிகாரம் பெற்ற பெரிய குரு ஒருவர் நமக்கு உண்டு. ஆதலால், தீய மனச் சான்றிலிருந்து விடுவிக்கப்பட்ட உள்ளமும் தூய நீரில் கழுவப்பட்ட உடலும் உடையவர்களாய், நேரிய உள்ளத்தோடும் மிகு உறுதியான நம்பிக்கையோடும் அவரை அணுகிச் செல்வோமாக. நமக்கு வாக்களித்தவர் நம்பிக்கைக்கு உரியவர். எனவே நாம் எதிர்நோக்கியிருப்பதைப்பற்றித் தயக்கமின்றி அறிக்கையிடுவதில் நிலையாய் இருப்போமாக. அன்பு செலுத்தவும் நற்செயல்கள் புரியவும் ஒருவரையொருவர் தூண்டியெழுப்பக் கருத்தாயிருப்போமாக. சிலர் வழக்கமாகவே நம் சபைக் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை. நாம் அவ்வாறு செய்யலாகாது ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுவோமாக. இறுதிநாள் நெருங்கி வருகிறதைக் காண்கிறோம் எனவே இன்னும் அதிகமாய் ஊக்கமூட்டுவோம். உண்மையை அறிந்தபின்னரும், வேண்டுமென்றே நாம் பாவத்தில் நிலைத்திருந்தால், இனி நமக்கு வேறு எந்தப் பாவம்போக்கும் பலியும் இராது.

**பதில்பாடல் :** ஆண்டவரை நாடுவோரின் தலைமுறையினர் இவர்களே.

**நற்செய்தி : மாற்கு 4 : 21 - 25**

அக்காலத்தில் இயேசு மக்களிடம், "விளக்கைக் கொண்டு வருவது எதற்காக? மரக்காலின் உள்ளேயோ கட்டிலின் கீழேயோ வைப்பதற்காகவா? விளக்குத் தண்டின் மீது வைப்பதற்காக அல்லவா? வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை. வெளியாகாமல் ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" என்றார். மேலும் அவர், "நீங்கள் கேட்பதைக் குறித்துக் கவனமாயிருங்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் இன்னும் கூடுதலாகவும் கொடுக்கப்படும். ஏனெனில், உள்ளவருக்குக் கொடுக்கப்படும் இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்" என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** பொய்மை என்னும் இருளகற்றி வாய்மை என்னும் ஒளியேற்றிட இன்றைய நற்செய்தி எம்மை அன்போடு அழைக்கின்றது. கடவுள் நம்மை தமது சாயலாக படைத்து அளவுக்கதிகமாக அன்புசெய்து நமக்கு சகல சந்தோஷங்களையும் கொடுத்திருக்கின்றார். ஆனால் நாம் அவற்றை மறந்து வாழ்வது முறையா? வாக்குறுதிகளைத் தருகின்றவரும் அவரே அவற்றைக் காப்பவரும் அவரே. ஆனால் நாம் அவருக்கு கொடுத்த வாக்குறுதிகளை கடைப்பிடித்து வாழ்கின்றோமா? திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின் மூலமாக அவரோடு இணைந்து கொண்ட நாம் இன்றுவரை இணைந்திருக்கின்றோமா? எமக்கு ஏற்பட்ட தோல்விகள், கவலைகள் அவரிடமிருந்து விலகி ஓடச்செய்யவில்லையா? சற்று சிந்திப்போம். கிறிஸ்துவே வாய்மைக்கு விளக்கு. அவரே உண்மையான ஒளி என்ற உண்மை இன்றைய நற்செய்தி ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது. விளக்கை ஏற்றி மரக்காலின் கீழ் எவரும் வைப்பதில்லை. அதேபோன்று கிறிஸ்து என்னும் ஒளியை நாம் மறைத்துவைக்க முடியாது. அவரது வார்த்தைக்கு திறந்த உள்ளத்தோடு செவிமடுப்பவர்களுக்கு அவரின் கொடை அதிகமாகவே கொடுக்கப்பட்டும். ஒளியாம் கிறிஸ்துவின் வார்த்தைக்கு செவிமடுப்போம் எமது வாழ்வின் இருளைப் போக்குவோம்.